முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| எஸ்.சி.எண். 114/2025 | அ.த.சா.7 |
| பெயர்: பிரிட்டோ | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 21.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>(2ம் எதிரி ஆஜர். )</u>

<u>முதல் விசாரணை</u> :-

நான் முத்தழகுபட்டியில் குடியிருக்கிறேன். தற்போது திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். அ.சா.1,2 ஐ எனக்கு தெரியும். சுமார் 12 வருடங்களுக்குமுன்பு அ.சா.2 க்கு சொந்தமான பெட்ரோல் பங்கில்வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது ஒருநாள் இரவு சுமார் 8.30 மணியளவில் 2 நபர்கள் குடிபோதையில் வந்து பெட்ரோல் பங்கில் வந்து சண்டை போட்டார்கள். அ.சா.2 கேட்கவந்தபோது கத்தியால் குத்த வந்தார்கள் அப்போது அ.சா.1 தடுக்க சென்றபோது அவர் இடுப்பில் கத்தியால் தாக்கியதில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு அ.சா.1 மருத்துவ சிகிச்சைக்கு சென்றார். அ.சா.1 ஐ தாக்கிய நபர் யார் என்று எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி சம்பவத்தில் ஈடுபட்டாரா என்று எனக்கு தெரியவில்லை. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-1 புகாரில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டதாக

சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**-

நான் கையெழுத்து செய்த புகாரில் என்ன விபரம்எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

மறு விசாரணை-இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.21 18:45:31 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| எஸ்.சி.எண். 114/2025 | அ.த.சா.8 |
| பெயர்: பாண்டியராஜன். | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 21.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(2ம் எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை** :-

நான் தற்போது விளாம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகின்றேன். கடந்த 27.01.2014 அன்று திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் நான் சிறப்பு சார்பு ஆய்வாளராக நான் பணியிலிருந்துபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 இடம் புகாரை பெற்று நிலையம் திரும்பி 22.00 மணிக்கு திண்டுக்கல் நகர் தெற்கு கா.நி.கு.எண். 31/2014 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச உ/இ 3(1) தமிழ்நாடு பி.பி.டி.எல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு ெய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-8. அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் எண்.3 திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

ஆய்வாளர் வழககை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.45 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் அ.சா4 மற்றும் ரஞ்சித்குமார் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்துள்ளார். மாதிரிவரைபடம் அ.சா.ஆ-9. சம்பவ இடத்திலிருந்து உடைந்த கண்ணாடி

துண்டுகளை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். உடைந்த கண்ணாடி துண்டுகள் அ.சா.பொ.1. பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 28.01.2014 அன்று 16.00 மணிக்கு அங்கு விலாஸ் இரக்கம் பஸ் ஸ்டாப்பில் வைத்து 1ம் எதிரியை சாட்சிகள் அ.சா.5 மற்றும் 6 முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை வேடபட்டி ஒத்தக்கன் பாலம் அருகில் சுடுகாடு அருகில் அழைத்துச்சென்றபோது அங்கு புதரில் மறைத்து வைத்திருந்த கத்தியை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மகஜரில் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தி'ன் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-10, கைப்பற்றுதல் மகஜர் அ.சா.அ-11. கத்தி அ.சா.பொ.2

பின்னர் எதிரியையும் தடயத்தை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளர். 2ம் எதிரி முன் எதிர்பார்ப்பு பிணையில் சென்றுள்ளார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தங்கராஜ் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டு நகல் பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ-12. கண்ணாடி சேதமதிப்பு சான்றும் பெற்றுள்ளார். அந்த சான்று அ.சா.ஆ-13. இறுதியில் புலன்விசாரணை முடித்து 20.02.2014ம் தேதி குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார். புலன்விசாரணையின்போது அ.சா.1 முதல் 7 சாட்சிகள் எதிரிகளையும் குற்ற சம்பவத்தையும் இணைத்து சாட்சியத்தில் கூறியுள்ளார்கள். நான் புலன்விசாரணை அதிகாரியுடன் பணிபுரிந்ததாலும், புலன் விசாரணையின் போது அவருடன் ஒத்துழைத்து இருந்ததாலும் அவருடைய கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

இந்த வழக்கில் சம்பவம் நடந்த நேரம் 26.01.2014ம் தேதி 20.30 மணியாகும். வழக்கு சம்பவம் தொடர்பாக காவல்நிலையம் ஆஜராகி யாரும் புகார் கொடுக்கவில்லை. புகாரானது அ.சா.2 உடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு பின்னிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில் ஆய்வாளர் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயாரிக்கவில்லை என்றும், சொன்ன நேரத்தில் 1ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து பதிவேட்டு நகலில் அ.சா.1 ஐ சிகிச்சைக்கு சேர்த்தவர் என்ற விபரத்தில் ஸ்ரீதர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். சேதமதிப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணாடியின் விலையை காட்டக்கூடிய ரசீது எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சரியான புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.21 18:43:43 +0530

Principal District Judge,
Dindigul.